### ஒற்றை ஆட்சி - ஒற்றை மதம் - ஒற்றை மொழி என்று

# அரசமைப்புச் சட்டத்தையே தலைகீழாக மாற்ற ஒன்றிய பா.ஜ.க. அரசு திட்டம்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, ஜூலை 14-

வரும் 20-ஆம் தேதி கூடும் நாடாளுமன்றக் கூட்டத் தொடர் பி.ஜே.பி.யின் அஜெண்டாக்களை நிறைவேற்றும் வகையில், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிக்கட்டுமானத்தையே தகர்க்கும் சட்டங்களை நிறைவேற்ற பி.ஜே.பி., ஆர்.எஸ்.எஸ். திட்டமிட்டுள்ளது. அனைத்துக் கட்சிகளும் ஒருங்கிணைந்து இவற்றை முறியடிக்க வேண்டும் என்றும், தி.மு.க. மீது களங்கம் ஏற்படுத்தும் முயற்சிகள், சூழ்ச்சிகள் எடுபடாது என்றும் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

வருகிற ஜூலை 20-ஆம் தேதியன்று தொடங்கவிருக்கும் நாடாளுமன்றத் கூட்டத் தொடர் ஆகஸ்ட் 13-ஆம் தேதி வரை நடைபெறவிருக்கிறது. மற்ற கூட்டத் தொடர்களைவிட, இந்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் உறுப்பினர்கள், அமைச்சர்கள், பிரதமர், குடியரசுத் தலைவர், துணைத் தலைவர் உள்ளிட்ட பெரும் பொறுப்பாளர்கள் அத்துணைப் பேரும் பதவியேற்பின்போது, பிரமாணம் எடுத்துக்கொண்ட இந்திய அரசியலமைப்புச் சட்டத்தினையே புறந்தள்ளி, அதன் முக்கிய தனித்தன்மையான அடையாளத்தினையே மாற்றி, ஜனநாயகக் குடியரசு என்பதையும், மக்களிடம் இறையாண்மை, சமதர்மம், மதச்சார்பின்மை (BASIC STRUCTURE OF THE CONSTITUTION) அடிக்கட்டுமானத்தையே அடியோடு மாற்றி, (கரையான் அரித்த நூலின் வெறும் அட்டை போல் ஆக்கிட பெரும் முயற்சி நடக்கிறது.) பார்லிமெண்டரி முறைக்குப் பதிலாக, அதிபர் முறைக்கு ஈடாக, பிறகு ஒரு "சர்வாதிகாரத்திற்கு" நாடாளுமன்ற முறை மூலமே ஏற்பாடு செய்யும் ஒரு சூழ்ச்சித் திட்டமாக்குவதற்கான எல்லா முயற்சிகளுக்கும் கால்கோள் விழா நடத்திட முனைகிறது ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. அரசு.

**சூழ்ச்சி மூலம் ஆட்சியைப் பிடித்த இயக்கம்!**

பாபர் மசூதியை இடித்து அயோத்தி கோயில் திட்டத்தை நிறைவேற்றியதுபோல, அரசியலமைப்புச் சட்டத்தின் திருத்தங்கள் மூலம், அண்ணல் அம்பேத்கரின் அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றியமைத்து, பன்வகைக் கலாச்சாரம், மொழி, நாகரிகம், பல சமூகங்கள் - மக்கள் வாழும் நாட்டினை, மூன்று முறை இந்திய ஜனநாயக அரசால் தடை செய்யப்பட்டு, பிறகு பேச்சுவார்த்தை - உறுதிமொழி மூலம் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட - அவ்வப்பொழுது உருமாற்றம் (CAMOUFLAGUE) நடத்தி 'வித்தைகள்', 'வியூகங்கள்' மூலம் தந்திரம், சூழ்ச்சிமூலம் ஆட்சியைப் பிடித்த ஓர் இயக்கமாம் ஆர்.எஸ்.எஸ்.சின் கொள்கையான ஒற்றை மதம் - தன் மதம் - ஹிந்து மதம், ஒற்றை மொழி தம் மொழி - சமஸ்கிருதம், ஹிந்தி, ஒற்றைக் கலாச்சாரம் தமது கலாச்சாரம் - ஆரியக் கலாச்சாரம் முதலியவற்றை வைத்து, ஆளத் திட்டமிட்டுக் காய் நகர்த்திடும் வகையில், சட்டத் திட்டங்களையே நிறைவேற்றிட முயற்சிக்கிறது.

**வியூகம் வகுக்கும் பா.ஜ.க.!**

அரசியலமைப்புச் சட்டத்தில், முக்கிய திருத்தங்களுக்குத் தேவையான மூன்றில் இரண்டு பங்கு (2/3 - TWO THIRDS MAJORITY) உறுப்பினர்களை நாடாளுமன்ற இரு அவைகளிலும் பெற முடியாவிட்டாலும், கட்சிகளை உடைத்தும், இணைத்தும், வேறு சில எதிர்க்கட்சிகளைத் திரிசூலங்களான வருமான வரித்துறை, சி.பி.அய்., அமுலாக்கத் துறை மூலம் அச்சுறுத்தியும், மற்றும் "பஞ்சு மிட்டாய்களைக்" காட்டியும், தனது இலக்கை அடைய நாளும் வியூகம் வகுத்து வருகிறது!

அதற்கு, இந்த நாடாளுமன்றக் கூட்டத் தொடர்தான் அதிமுக்கியம். ஆர்.எஸ்.எஸ். தத்துவகர்த்தா கோல்வால்கர் கூறியபடி, மாநிலங்களே இல்லாத (கூட்டாட்சிக்குப் பதில்) ஒற்றை ஆட்சி - UNITARY ஆட்சியை நிலை நிறுத்தி, மாநில அதிகாரப் பறிப்பை, கல்வி, உணவு, ஆளுமை போன்ற பல துறைகளிலும் ஏற்படுத்தி, 'ஹிந்துராஷ்டிரம்' அமைக்க, ஏற்பாடுகள் சட்டத்தைக் கருவியாக்கி, சிறுபான்மை மக்களான இஸ்லாமிய, கிறித்துவ சமூகத்தினரின் குடியுரிமை மற்றும் வாழ்வுரிமை, கல்வி, மருத்துவக் கொடை உரிமை உள்பட அனைத்தையும் பறிக்கும் சட்டங்கள் - திருத்தங்கள் நிறைவேற்றப்பட்டும், நிறைவேற்றப்படவுமான 'வியூகம்' வேக வேகமாகத் திட்டமிடப்பட்டுள்ளன!

முன்பு மூன்றில் இரண்டு பங்கு கிட்டாத காரணத்தால், தமிழ்நாடு, மேற்கு வங்காளம், கேரளம், அசாம் போன்ற மாநிலச் சட்டமன்றத் தேர்தலின்போதே அவசர அவசரமாக நாடாளுமன்றத்தினைக் கூட்டி, 33 சதவிகித மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவோடு திட்டமிட்டே - தொகுதி மறுவரையறை மசோதாவையும் பொருத்தமில்லா இணைப்பாக்கி, ஆழம் பார்த்து, அம் முயற்சியில் தோற்றனர்.

**பா.ஜ.க. திட்டம் தோற்கடிக்கப்பட்டது!**

அதனால், தி.மு.க.வுக்குத் தனி மரியாதை இந்தியா முழுவதும் ஏற்பட்டது! பா.ஜ.க. திட்டம் தோற்கடிக்கப்பட்டது. அது தெரிந்தே தேர்தல் பிரச்சாரத்திற்கு ஆயுதமாகப் பயன்படுத்தலாம் என்று அதனைத் தேர்தலின்போது நடத்தியது ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. ஒன்றிய ஆட்சி.

தற்போது கல்வித் திட்டத் திணிப்பு, ஒரே நாடு ஒரே தேர்தல், ஏழை உணவு பாதுகாப்புச் சட்ட மசோதா (திருத்தம்) போன்ற பல திட்டங்கள் கொண்டுவரப்பட உள்ளன. அத்துடன், நீதிமன்றத்தால் தண்டிக்கப்படும் ஒரு மாநில முதலமைச்சர், அமைச்சர்கள் தம் பதவியை இழந்தவுடனே சிறையில் அடைக்கப்படுவதற்கான (ஏற்கனவே பா.ஜ.க. ஆட்சியில் வேறு வடிவங்களில் இது நடந்து வரும் நிலையில்) புதிய வியூகமும் வகுக்கப்பட்டு வருகிறது. தற்போது இதற்கு முழுமையான சட்ட சம்மதம் பெற்றுத் தரும் புதிய வியூகம் முதலியன வரவிருக்கின்றன.

**தி.மு.க.விற்குப் களங்கம் ஏற்படுத்த மறைமுகமான ஏற்பாடுகள்!**

மற்ற கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பிளவுபடுத்தியது - காரணம் வெளிப்படை. தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்களை விலை பொருளாகவோ அல்லது குதிரை பேரம் பேசுபவர்களாகவோ 'அவதாரம்' எடுக்க வைக்க முடியாது என்று தெரிந்தும், அவர்களது பெயரைக் கெடுக்கத் திட்டமிட்டு, தி.மு.க. விற்குக் களங்கம் ஏற்படுத்த மறைமுகமான ஏற்பாடுகள் நடந்துவிட்டது போல, ஒரு திட்டமிட்ட முறையில் ஒரு வதந்தி, பரப்புரை (WHISPERING CAMPAIGN) இணையதளம் மற்றும் ஆரிய ஏடுகள் வழி நடத்தப்படுகிறது. இத்தகைய சூழலில் தி.மு.க தலைமை நிச்சயம் முழு உறுதியுடன், தனது லட்சியப் பாதையில் மாறாப் பயணத்தில் நிலைத்து நின்று வென்று காட்டும் என்பதை நாடு அறிய வேண்டும்.

சில ஆரிய பார்ப்பன ஏடுகளும், ஊடகங்களும், தி.மு.க.விற்கு ஒரு 'பழி' ஏற்படுத்த இத்தகைய பிரச்சாரத்தினைச் செய்கின்றனர். "நாடாளுமன்றத்தில், அதன் நிலைப்பாடு முந்தையது போல இருக்காது" என்று கூறுவதை, "பொய்யாய், பழங்கதையாய், கனவாகிப் போகும்படி" காட்டும் என்பதை உரிமையுடன் நம்புகிறோம்.

தனித்தனியாக நின்றாலும், ஒரே முடிவில் வென்று காட்டவேண்டிய தருணம் இது!

அனைத்து எதிர்க் கட்சிகளும், "யார் வரக்கூடாது" என்பதையே ஒரே திட்டமாக்கி, தனித்தனியாக நின்றாலும், ஒரே முடிவில் வென்று காட்டவேண்டிய தருணம் இது! அலட்சியம் காட்டினால், 'இந்தியா' இருக்காது; மாறாக, 'ஹிந்துயா'தான் இருக்கும்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### அடையாறு மண்டலத்தில்

# ரூ.36 இலட்சம் மதிப்பீட்டில் பல்நோக்கு மையக் கட்டடம்!

## மேயர் திருமதி ஆர்.பிரியா பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்!





சென்னை, ஜூலை.14-

பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வார்டு-178, தரமணி, அண்ணா தெருவில் 178ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்களின் 2024-25ஆம் ஆண்டு வார்டு மேம்பாட்டு நிதியில் ரூ.36 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள பல்நோக்கு மையக் கட்டடத்தினை மேயர் திருமதி ஆர்.பிரியா நேற்று (13.07.2026) பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

இந்த பல்நோக்குக் கட்டடம் 714 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. இதனால் மகாத்மா காந்தி நகரைச் சார்ந்த பொதுமக்கள் பயனடைவர்.

இந்நிகழ்ச்சியில், துணை மேயர் மு.மகேஷ் குமார், தெற்கு வட்டார துணை ஆணையாளர் அஃதாப் ரசூல், இ.ஆ.ப., மண்டலக்குழுத் தலைவர் ஆர்.துரைராஜ், மாமன்ற உறுப்பினர் எஸ்.பாஸ்கரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### த.வெ.க. அரசின் அவலநிலையை

# விமர்சித்ததால் - மாற்றுத் திறனாளியும் கைது!

## விஜய் என்ன அவதாரமா? – தி.மு.க. ஐ.டி.விங் கேள்வி!




சென்னை, ஜூலை 14-

சமூக வலைத்தளத்தில் களமாடும் கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த தங்கமணி என்ற கழக உடன்பிறப்புஒருமாற்றுத்திறனாளி என்பதை அறிந்தும், விஜய்யை அவர் விமர்சித்து விட்டார் என்ற புகாரின் அடிப்படையில் கைது நடவடிக்கையை மேற்கொண்டது ஈவு இரக்கம் துளியுமற்ற தவெக அரசின் காவல் துறை.

மருத்துவ பரிசோதனை என்ற பெயரில் மாற்றுத்திறனாளி தங்கமணியை கொடூரமாக அலைக்கழித்திருக்கிறார்கள். அவருடைய நிலையைப் பார்த்து நீதிமன்றமே ஜாமீன் வழங்கி உள்ளது.

முதல்வர் பொறுப்பில் இருந்து கொண்டு விஜய் பேசிய பீப் வார்த்தைகளை விட மோசமாக இன்னொருவர் விமர்சனம் பண்ணி விட முடியுமா?

விமர்சனமே செய்யக்கூடாது என்கிற அளவுக்கு விஜய் என்ன அவதாரமா?

ஆணவத்தால் ஆடியவர்களின் கடைசி காலம் எப்படி இருந்தது என்பதை தமிழ்நாட்டு மக்கள் அறிவார்கள். ரொம்ப ஆடாதீங்க..

# குற்றவாளிகளின் கூடாரம் த.வெ.க!

## தி.மு.க. ஐ.டி.விங் விமர்சனம்!




சென்னை, ஜூலை 14-

மேடை கிடைச்சா போதும் - போதை ஒழிப்பு, பெண்கள் பாதுகாப்பு, ஊழலற்ற அரசியல்னு வாய்கிழிய தத்துவம் பேசுறதும், நிஜத்துல தப்பு பண்றவங்களை எல்லாம் தவெக வாஷிங் மெஷினில் போட்டு தங்களோட தூய்மையான கட்சி நிர்வாகியா மாத்துறதும் தான் விஜய்யோட கொள்கையா? இவங்களோட இந்த இரட்டை வேடத்தையும், இதுக்குத் துணை போற காவல்துறையையும் நாங்க வன்மையா கண்டிக்கிறோம்.

ஈரோடு பவானியில 8 கிலோ குட்கா, 3 கார்கள், பணத்தோடு தவெக செயற்குழு உறுப்பினர் அருண் என்பவரைப் போலீஸ் கையும் களவுமாகப் பிடிச்சிருக்காங்க. இதே அருணை கடந்த ஒன்றரை டன் குட்கா கடத்துனதுக்காக தி.மு.க. ஆட்சிக் காலத்துல குண்டர் சட்டத்துல தூக்கி உள்ள வச்சாங்க. அப்படிப் பட்ட ஒரு கிரிமினல் பின்னணி கொண்ட ஆளுக்கு தவெக-வுல பெரிய பொறுப்பு கொடுத்ததே தப்பு.

அதைவிட கொடுமை என்னன்னா, இப்போ அவர் தவெக நிர்வாகி ஆயிட்டாருங்கிற ஒரே காரணத்துக்காக, விஜய் கீழ இயங்குற காவல்துறை அவரை இரவோடு இரவா ஸ்டேஷன் பெயில்ல வெளிய விட்டுருக்கு.

சட்டம் யாருக்காக வளைக்கப்படுது? ஒன்றரை டன் குட்கா கடத்துன ஒரு பழைய குற்றவாளி, மறுபடியும் குட்காவோடு மாட்டும் போது எப்படி இரவோடு இரவா ஸ்டேஷன் பெயில் கொடுக்க முடியும்? இதுக்கு பேருதான் சட்டம் தன் கடமையைச் செய்யுறதா? இல்ல அரசியல் செல்வாக்கா?

விஜய்யோட போதை ஒழிப்புக் கொள்கை இது தானா? போதைப்பொருளை ஒழிப்போம்னு மேடையில உறுதிமொழி எடுக்குறீங்களே விஜய் அவர்களே, இப்போ உங்க கட்சி நிர்வாகியே போதைப்பொருள் கடத்திட்டு வந்து மாட்டியிருக்காரே இதுக்கு உங்க பதில் என்ன? உங்களால ஒரு ...... புடுங்க முடியாதுன்னு மக்கள் பேசுறது நிஜம் தானா?

தப்பு செஞ்சவங்க யாரா இருந்தாலும் அவங்களை உங்க கட்சி வாஷிங் மெஷினில் போட்டுப் புனிதர்களாக்கப் பார்க்காதீங்க. பொதுமக்களோட உயிரோடு விளையாடுற போதைப்பொருள் கடத்தல் காரங்களுக்கு ஆதரவா இருக்குற தவெக-வின் இந்த அரசியலையும், காவல் துறை காட்டியிருக்கிற இந்த மெத்தனப்போக்கையும் சும்மா விட முடியாது. பிணையில் விடப்பட்ட அருண் மீது உடனே கடுமையான பிரிவுகளில் வழக்குப் போட்டு மறுபடியும் சிறையிலடைக்க வேண்டும்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மகளிர் அணி தலைவரும் குன்றத்தூர் ஒன்றிய உறுப்பினரும் ஆதனூர் ஊராட்சி மன்ற தலைவருமான மலர்விழி தமிழ் அமுதன் இல்லத் திருமண வரவேற்பு விழா நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் – குன்றத்தூர் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் ஒன்றியக் குழுத் தலைவர் சரஸ்வதி மனோகரன், வடக்கு ஒன்றிய செயலாளர் ஏ.வந்தே மாதரம் , உமா மகேஸ்வரி வந்தே மாதரம், மத்திய ஒன்றியப் பொறுப்பாளர் இ.மணி, படப்பை ஊராட்சி மன்றத் தலைவரும் மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளருமான எஸ்.கர்ணன், ஏ.டி.எம். வினோத் மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள், பெருந்திரளாக கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர்.



தி.மு.க. தொண்டர் அணிச் செயலாளர் மாஸ்டர் பெ. சேகர் தலைமையில் தி.மு.க. தொண்டர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழாவில் ஏழைஎளியோருக்கு நல உதவிகளுடன் அறுசுவை உணவு வழங்கினார். தொண்டர் அணித் தலைவர் ஜி. சுகுமாறன், மதுராந்தகம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் பொன். சிவக்குமார், ஒன்றியக் குழு உறுப்பினர் இராமகிருஷ்ணன் உள்ளிட்ட கழக நிருவாகிகள் உடன் உள்ளனர்.

### தி.மு.க. தொண்டரணி சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா - நல உதவிகள்!

## மாஸ்டர் பெ.சேகர் தலைமையில் காஞ்சி ஜி.சுகுமாறன் முன்னிலையில் வழங்கப்பட்டது!

சென்னை, ஜூலை 14-

தி.மு.க. மாநிலத் தொண்டர் அணியின் சார்பில், காலத்தை வென்றவரும் அரசியல் ஞானியுமான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103ஆம் பிறந்த நாள் விழாவினையொட்டி, 12.07.2026 அன்று மாலை 5.00 மணியளவில், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், மதுராந்கதம் ஒன்றியம், நீர்ப்பெயர் ஊராட்சியில் உள்ள 'மேல்வசலைக் கிராமத்தில்" தொண்டர் அணி மாநிலச் செயலாளர் மாஸ்டர் பெ. சேகர் தலைமையில் மாநிலத் தொண்டர் அணித் தலைவர் காஞ்சி ஜி.சுகுமாரன் முன்னிலையில்: மாஸ்டர் பெ. சேகர், ஜி. சுகுமாரன், மதுராந்தகம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் பொன்.சிவக்குமார், ஒன்றியக்குழு உறுப்பினர் இராமகிருஷ்ணன் ஆகியோர் நலத் திட்ட உதவிகள் வழங்கி அறுசுவை உணவு வழங்கினர்.

மேல் வசலைக் கிளைக் கழகச் செயலாளர் மு.சண்முகம், கீழ்வசலைக் கிளைக் கழகச் செயலாளர்கள் கஜபதி, காத்தவராயன், நீலமங்கலம் கிளைக் கழகச் செயலாளர்கள் என். டி. ஜெயபால், சிவானந் தன், தாமரைச்செல்வன். நீர்ப்பெயர் கிளைக் கழகச் செயலாளர் வாசுதேவன் ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

மேல்வசலை மு.கண்ணப்பன், கி.இராமசாமி, மா. ஆறுமுகம், ஆதிகேசவன், இரவிச்சந்திரன், முன்னாள் கவுன்சிலர் ஆறுமுகம், கு.எத்திராஜ், மு.குமரன், கு.தேவதாஸ் செ. சிவக்குமார், ம. இரஞ்சித் குமார் ஆகியோர் நன்றி கூறினார்.

அரியலூர் மாவட்டத் தொண்டர் அணி அமைப்பாளர் வை. முருகாநந்தம், துணை அமைப்பாளர்கள் செல்வராஜ், உலகநாதன், காஞ்சித் தெற்கு மாவட்டத் தொண்டர் அணித் தலைவர் சரவணன், வாலாஜாபாத் தெற்கு ஒன்றிய தொண்டர் அணி அமைப்பாளர் கே.சி. முருகன், ஈரோடு வடக்கு மாவட்டத் தொண்டர் அணி துணை அமைப்பாளர் பெஸ்ட் சக்திவேல், கோவை வடக்கு மாவட்டத் தொண்டர் அணி துணை அமைப்பாளர் ஜி. குணசீலன், குட்டி (எ) செல்லதுறை, ராமு, இராணிப்பேட்டை மாவட்டத் தொண்டர் அணித் தலைவர் சு. வெங்கடேசன், ப. உதயகுமார், சென்னை வடக்க மாவட்டத் தொண்டர் அணி துணை அமைப்பாளர் இரா. முருகன், இரா. நிவேதா, இரா. விக்னேஷ், கீழ்வசலை மனோகரன் ஆகியோர் நன்றி கூறினர்.





சென்னை தென்மேற்கு மாவட்டம் மாவட்டப் பிரதிநிதி பழக்கடை இரா. மூர்த்தியின் தாயார் இரா. சோலையம்மாள் அவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சி – திருவுருவப்படத் திறப்பு நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு கலந்து கொண்டு திருமதி சோலையம்மாள் அவர்களின் திருவுருவப்படத்தை திறந்து வைத்து மலரஞ்சலி செலுத்தினார். இதில் தியாக ராயர்நகர் மேற்குப்பகுதிச் செயலாளர் கே. ஏழுமலை எம்.சி., கிழக்குப் பகுதி பொறுப்பாளர் கோ.சு.மணி, மயிலை மேற்கு பகுதிச் செயலாளர் நந்தனம் மதி, எம்.சி., மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி., வர்த்தகர் அணி எஸ்.மோகன், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.எஸ். பழனி, வட்டச் செயலாளர்கள் பி.ஜெயகுமார், பி.மாரி, கோ. உதயசூரியன், வழக்கறிஞர் எஸ்.லட்சுமி காந்தன், ஜி.பி.செந்தில்குமார், பாபா சுரேஷ், தலைமைக் கழகப் பேச்சாளர் ஈரோடு இறைவன், ச.சண்முகநாதன், கே. எஸ். வெல்டிங் ராஜா, மு. வெங்கடேன், டி. தேவராஜ், சு.கண்ணதாசன், பில்டர் செந்தில், செம்மொழி மணிவண்ணன், ஆட்டோ மூர்த்தி, எஸ். இராமலிங்கம், எச்.பலராமன், கண்ணன், ரமேஷ், தயாளன், தீபா, பீர்முகமது, பழக்கடை இரா, சேகர், மற்றும் கழக செயல்வீரர்கள், குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.